செய்தி வெளியீடு - 399 நாள்.18.05.2010.

## கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர்கள் நல வாரியத்தைச் சேர்ந்த 34 உறுப்பினர்களின் குடும்பங்களில் கல்வி உதவித்தொகையாக 40 மாணவர்களுக்கு ரூ.61 ஆயிரம் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர் நலவாரியம் அமைத்து ஆணையிட்டது. பின்னர் இந்நலவாரியத்தின் தலைவராக மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இந்த நலவாரியத்தில் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு விபத்து நிகழ்ந்து மரணம் ஏற்பட்டால் 1 இலட்சம் ரூபாயும், விபத்தில் சிக்கி ஊனமடைந்தால் ஊனத்திற்கேற்ப 1 இலட்சம் ரூபாய் வரையிலும், இயற்கை மரணம் நிகழ்ந்தால் 15 ஆயிரம் ரூபாயும் ;

உறுப்பினர்களின் குழந்தைகள் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு முதல், கல்லூரிகளில் தொழிற்கல்வி உட்பட அனைத்து வகைப் பட்டமேற்படிப்புகள் வரை அவரவர் படிக்கும் வகுப்புகளுக்கேற்ப 1,000 ரூபாய் முதல் 6,000 ரூபாய் வரையும் ;

உறுப்பினரின் திருமணத்திற்கு 2,000 ரூபாயும்,

பெண் உறுப்பினரின் மகப்பேறு காலத்திற்கு 6 ஆயிரம் ரூபாயும்,

கண் கண்ணாடி வாங்கிட 500 ரூபாய் வரையும்

60 வயதானால் முதியோர் உதவித் தொகையாக மாதம் 400 ரூபாயும்

– எனப் பல்வேறு திட்டங்களின் கீழ் உதவித்தொகைகள் வழங்கப்படவுள்ளது.

மேற்படி நலத்திட்ட உதவிகள் கம்பிவடத் தொழிலாளர்களுக்கு விரைவாக சென்றடைய வேண்டி உறுப்பினர் சேர்க்கைக்கான படிவங்கள் அச்சடிக்கப்பட்டு மாவட்டம்தோறும் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் விளைவாக பல்வேறு மாவட்டங்களில் இருந்து இதுவரை வரப்பெற்ற சுமார் 1183 விண்ணப்பங்களில் 1140 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு 673 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கும் அடையாள அட்டைகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. வரப்பெற்ற விண்ணப்பங்களிலிருந்து கல்வி உதவித்தொகை பெற தகுதிபெற்ற சுமார் 40 இனங்கள் கண்டறியப்பட்டு 2009–10 ஆம் கல்வியாண்டிற்கான உதவித்தொகையாக ரூ.61 ஆயிரம் வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள

அம்மாணவர்களது பெற்றோர்களுக்கு இன்று மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

பயன் அடைந்தோரில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 11 மாணவர்களின் உதவித்தொகையான ரூ.19000/–, 10 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அதேபோன்று திருச்சி மாவட்டத்தில் 9 மாணவர்களின் உதவித்தொகையான ரூ.12,500/–, 7 உறுப்பினர்களுக்கும், சேலம் மாவட்டத்தில் 5 மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.9000/– 4 உறுப்பினர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் 4 மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.4500/–, 4 உறுப்பினர்களுக்கும், பெரம்பலூர், சிவகங்கை, நாகை, தஞ்சாவூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தலா 2 மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.12000/– 8 உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் விடுதியில் தங்கி பொறியியல் படிக்கும் ஒரு மாணவருக்கு கல்வி உதவிதொகைக்கான ரூ.4000/– மும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் இன்றைய தினம் வழங்கப்பட்டது.

தற்பொழுது பன்னிரெண்டாம் வகுப்பு முடிவுகள் வெளியான நிலையிலும், மேலும் 10 ஆம் வகுப்பு முடிவுகள் வெளியானதும் கல்வி உதவித்தொகை கோரி அதிக அளவில் மனுக்கள் வரப்பெறும் என்பதால் அதிக அளவில் கல்வி உதவித்தொகை இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

18/5/10

3/3